A

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2022

## எட்டாம் வகுப்பு

**நேரம் : 1.30 மணி** **தமிழ்** **மதிப்பெண்கள் : 50**

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:-** **14×1=14**

அ) பொருள் தருக:-

1) பண் 2) கிளை

ஆ) பிரித்து எழுதுக:-

1) பாடறிந்து 2) கண்ணோடாது

இ) சேர்த்து எழுதுக.

1) கதிர் + ஈன 2) கால் + இறங்கி

ஈ) கோடிட்ட இடத்தை நிரப்புக

1) சேரர்களின் நாடு ________ எனப்பட்டது

2) விகாரப் புணர்ச்சி ________ வகைப்படும்

உ) சரியான விடையை எடுத்து எழுதுக.

1) காட்டிலிருந்து வந்த ________ கரும்பைத் தின்றன.

அ) முகில்கள் ஆ) முழவுகள் இ) வேழங்கள் ஈ) வேய்கள்

2) நம்மை ________ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்

அ) இகழ்வாரை ஆ) அகழ்வாரை இ) புகழ்வாரை ஈ) கீழ்வாரை

ஊ) பொருத்துக.

1. பெயரெச்சத் தொடர் - கார்குழவி படித்தாள்
2. வினையெச்சத் தொடர் - வென்றான் சோழன்
3. வினைமுற்றுத்தொடர் - பாடி முடித்தான்
4. எழுவாய்த் தொடர் - எழுதியப்பாடல்

**II. பின்வரும் இசைக்கருவிகளின் பெயர்களை அகரவரிசைப்படுத்துக:-** **2**

படகம், தவில், கணப்பறை, பேரியாழ், உறுமி,

உடுக்கை, தவண்டை, பிடில், நாகசுரம், மகுடி

**III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக:-** **4×2=8**

1) தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?
2) முறை, பொறை என்பவற்றுக்குக் கலித்தொகை கூறும் விளக்கம் யாது?
3) பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?
4) அரசன் தண்டிக்கும் முறை யாது?
5) உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?

IV. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக:- 2×2=4

1) பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளரத் தேவையானது யாது?

2) பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?

3) மண்பாண்டம், சுடுமண் சிற்பம் - ஒப்பிடுக.

V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக:- 2×3=6

1) திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?

2) மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக?

3) தொகை நிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

VI. பின் வருவனவற்றுக்கு விடை தருக:-

அ) பின்வரும் மரபுத் தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக. 2×1=2

1) முதலைக் கண்ணீர் 2) வாழையடி வாழையாக

ஆ) கலைச் சொற்களை எழுதுக. 2×1=2

1) Drum 2) Horn

VII. அடிமாறாமல் எழுதுக:- 2+4=6

1) "விடல்" என முடியும் குறளை எழுதுக.

2) "ஆற்றுதல் என்பது" எனத் தொடங்கும் பாடறிந்து ஒழுகுதல் பாடலை எழுதுக.

VIII. எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடை தருக:- 1×6=6

1) காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக. (அல்லது)

2) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

********

www.Padasalai.Net